**நானாட்டான் பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜனவரி 24 இல் சபையின் செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து நானாட்டான் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 ஜனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணம் ரூபா 40,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதனை சில்லறை கடன் வழங்குனர் கணக்கின் கீழ் கணக்கிடாமல் தவறாக கடன் வட்டி கணக்கில் கணக்கிடப்பட்டுள்ளது.

**(ஆ)** மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் 03 மூலதன செலவின விடயங்களின் கூட்டுமொத்தத் தொகையான ரூபா 529,050 தவறாக நடைமுறைச் செலவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**(இ)** உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட வேண்டிய ரூபா 8,460,871 தொகையான முத்திரைத் தீர்வைக் கட்டண நிலுவைத் தொகையானது மீளாய்வாண்டின் கணக்குகளில் வருமதியாக வெளிப்படுத்தப்படாமையால் வருமானமானது ரூபா 8,460,871 ஆல் குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது.

**(உ)** நீதிமன்றத் தண்டப்பணம் மீளாய்வாண்டின் கணக்குகளில் ரூபா 1,503,090 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் வடக்கு மாகாணசபை பிரதம செயலாளரிடமிருந்து நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,183,835 ஆக உறுதிப்படுத்தப்பட்டிருப்பதனால் ரூபா 319,255 ஆன தொகையால் செலவிலும் கூடிய வருமானம் கூட்டிக் கணக்கிடப்பட்டுள்ளது.

**1.3.3 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் பின்வரும் இனங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை நிதி நிர்வாக விதிகள் | |
| | i) விதி இலக்கம் 5(xii) | காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | ii) விதி இலக்கம் 59 | ஒவ்வோராண்டு தொடக்கத்திலும் வருமான பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் அல்லது தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தரினால் சபைப் பிரதேசத்தில் வருமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | iii) விதி இலக்கம் 178(3) | வழங்குனர்களின் நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | iv) விதி இலக்கம் 218 | காணிகள், கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறையேனும் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தரினால் சோதனை செய்யப்படவேண்டியிருந்தும் அறிக்கையிடும் திகதி வரை சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150(1) | வியாபாரங்கள் பற்றிய நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டு வியாபார உரிமக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சோசலிசகுடியரசின் நிதி ஒழுங்குவிதி | |
| | (i) நிதி ஒழுங்குவிதி 371 | 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை பல்வேறு செயற்பாடுகளுக்காக சபையின் உத்தியோகத்தர்களுக்கும் வெளித்தரப்பினர்களுக்கும் செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 1,828,506 தொகை இதுவரைக்கும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.. |

(ii) நிதி ஒழுங்குவிதி 571

2011, 2012 ஆம் ஆண்டுகளுக்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களுக்கான 12 கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தத் தொகை ரூபா 123,385 ஆனது கணக்காய்வுத் திகதி வரை செலுத்தப்படாது பிரதேச சபையின் வைப்புக் கணக்குகளில் காணப்படுகின்றது.

குடிசார் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 50,358 ஆனது கணக்காய்வுத் திகதி வரை செலுத்தப்படாது வைப்புக் கணக்குகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

### 1.3.4 போதியளவில் அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

**(அ)** சபையின் மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்படாத ரூபா 21,005,241 தொகையான 13 பல்வேறு செலவினங்கள் சபையினால் முறையான அங்கிகாரமின்றி செலவு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ)** சபையின் மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்படாத 05 மூலதனச் செலவுகளின் கூட்டுமொத்தத் தொகையான ரூபா 17,282,285 செலவினங்கள் சபையினால் அங்கீகாரமின்றி செலவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 7,335,045 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது இதற்கு நேரெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா 1,725,031 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 9,060,076 முன்னேற்றத்தைக் காட்டுகின்றமைக்கான காரணம் சபையினுடைய மீண்டுவரும் உதவுதொகை மற்றும் வருமானங்கள் உயர்வடைந்தமையே ஆகும்.

### 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையின் மீளாய்வாண்டு மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும், உள்ளபடியான வருமானத்திற்கும் இடையில் ரூபா 11,005,245 வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 வாடகைகள்

சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ள கடை வாடகை நிலுவை ரூபா 1,549,147 அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

**(அ)** சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் 06 தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களின் கோபுரங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றில் 02 தொலைத்தொடர்பு நிறுவனங்களின் கோபுரங்களிற் அனுமதிக்கப்பட்ட வரி ரூபா 50,000 சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் உள்ள தொலைத்தொடர்பு நிறுவனங்களிற்கு குறித்த கோபுரங்கள் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து மாதாந்த வாடகை அறவீடு செய்வதற்கு சபையினால் 28 மே 2016 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மை

மூன்று கணனி மற்றும் நிழற்பிரதி இயந்திரம் பாவிக்காத நிலையில் உரிய பராமரிப்பற்ற முறையில் காணப்பட்டது.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) நானாட்டன் பிரதேச சபையின் முருங்கன் உப அலுவலகத்தினால் ஸ்ரீலங்கா டெலிகொம் இடமிருந்து உள்ளக வலை இணைப்பானது 2014 ஏப்பிரல் தொடக்கம் பெறப்பட்டிருந்தும் அதனை 2016 மே வரை பயன்படுத்தப்படாது இருந்தபோதும்,அதற்கான கொடுப்பனவாக ரூபா 35,253 செலுத்தப்பட்டுள்ளது

(ஆ) 2011 யூன் 29 திகதி முதல் இலங்கை வங்கியின் நிலையான வைப்பான ரூபா 2,900,000 மீளாய்வாண்டில் உள்ளுராட்சி ஆணையாளரின் அனுமதி இன்றி மீளெடுக்கப்பட்டிருந்தது.

### 3.3 செயற்திட்டத்தில் தாமதம்

மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 38 தலைப்புகளிற்கான கூட்டுமொத்தத் தொகையான ரூபா 7,194,382 செலவினங்களில் 40 வீதம் தொடக்கம் 100 வீதம் வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 செயற்பாட்டு அறிக்கை

மத்திய அரசு பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆம் திகதிய PF/R/2/2/3/5/(4) ஆம் இலக்க கடிதத்தின் 1:4:1 ஆம் பந்தியின் படி வருடாந்த செயற்பாட்டு அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை சபையினால் செயற்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.** **நல்லாட்சியும் கணக்களிப்பொறுப்பும்**

---

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 24 வேலைத்திட்டங்களின் ஒதுக்கீடுகளின் மொத்தத் தொகையான ரூபா 9,664,397 செலவினங்கள் முற்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பெறவேண்டிய கணக்குகள்
(ஈ) நிலையான வைப்பு
(உ) கணக்கீடு